ரூபாய் 25,000 என்பது பெரிய தடையாக இருக்கவில்லை. இன்று தலைமை ஆசிரியர் மக்களை மதிக்கிறார்கள். பெற்றோர்களை மதிக்கிறார்கள். பெற்றோர்களும் பள்ளிக்குப் போகிறார்கள். ரூபாய் 25,000 என்பது மட்டுமல்ல அதற்கு மேலும் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறார்கள். பெற்றோர்களும் பள்ளியின்மீது அதிக அக்கறை எடுக்கிறார்கள். இது பள்ளியின் வளர்ச்சிக்கு நன்மை பயக்கறதே தவிர வேறு நிலை இல்லை. தலைமை ஆசிரியர்களும் இப்போது பெற்றோர்களை மதிக்கிறார்கள். எம்.எல்.ஏ., எம்.பி.-க்களிடம் போகிறார்கள். ஆதரவு கேட்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படுவதற்கு இந்த நிபந்தனை நமக்குப் பயன்படுகிறது. அது நல்லதாக இருப்பதால் அதை நாம் எடுக்க வேண்டாம் என்று கருதுகிறோம்.

திரு. செ. சிவசாமி : பணம் கொடுத்து, இடம் கொடுத்து நான்கு ஆண்டுகளாகியும் திருப்பாளக்குடியில் புதிதாக பள்ளி ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுகுறித்து பரிசீலிக்கும்.

Pay scales in the Polytechnics.

* 368 Q.—THIRU R. UMANATH : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether the G.O. Ms. No. 1626 of 30th August 1979 of the Education Department removing the anomolies and refixing the payscale of lecturers of Polytechnics both Government and Private on par with the Engineering Colleges has been implemented in all the Polytechnic Colleges ;

(*b*) whether the Government have received any complaint or representations from any of the Technical Colleges for non-implementation of the above order ;

(*c*) if so, the details thereof ; and

(*d*) the action taken thereon ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) மற்றும் (ஈ) கேள்விக்கு இடமில்லை.

1982 மார்ச் 5]

திரு. ரா. கிருஷ்ணன் : யூ.ஜி.சி. பரிந்துரைப்படி என்ஜினியரிங் கல்லூரி விரிவுரையாளர்களுக்கு அல்லது கலைக் கல்லூரி பேராசிரியர்களுக்கு குறைந்த பட்சம் ரூபாய் 1,100 பேசிக் பே என்றிருக்கிறது. 1—1—1974-க்கு முன்னாலும்சரி அல்லது அதற்குப் பிறகு வந்தவர்களுக்கும் அதே ஸ்கேல் கொடுக்கப் படுகிறது. ஆனால் பாலிடெக்னிக்களில் அப்படிக் கொடுக்கப்படாமல் பாகுபாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சென்னை அடையாறு பாலிடெக்னிக், திருச்சி, மதுரையில் உள்ள பாலிடெக்னிக்களில் கொடுக்கிறார்கள். ஆனால் டைரக்டர் ஆப் டெக்னிக்கல் எட்யுகேஷன் உத்தரவுப்படி, மற்ற லெக்சரேர்ஸ்க்கு அப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு செய்யாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? எனவே அப்படி பாகுபடுத்தக்கூடிய நிலையை மாற்றி இவர்களுக்கும் அப்படிப் பட்டதொரு வாய்ப்பு, 1—1—1978-க்குப் பிறகு ப்ரமோஷன் வந்தால் அப்படிப் பட்டதொரு வாய்ப்பு கொடுக்க அரசு மறுபரிசீலனை செய்து ஏற்பாடு செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1—1—1974 என்றிருந்தது 1—1—1975 வரை விரிவுரையாளர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு ரூபாய் 1,100 அடிப்படைச் சம்பளம் கொடுக்கலாம் என்று ஒரு நபர் குழு பரிந்துரைத்துள்ளது. இது அரசாங்கத்தின் ஆய்வில் உள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல் கலைக் கல்லூரியில் பதவி உயர்வை 1978-லே அமுலுக்கு கொண்டு வந்தீர்கள். ஆனால், அதே தகுதியுள்ள டெக்னிகல் கல்லூரியில் வேலை செய்கிற ஆசிரியர்களுக்கு 1980-லே பதவி உயர்வு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த பாகுபாட்டை அகற்ற அரசு முன்வருமா என்று கேட்பதோடு, இன்கிரிமென்டில்கூட பாகுபாடு இருக்கிறதே, அந்தப் பாகுபாட்டையும் அகற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இவைகள் ஆய்விலே இருக்கின்ற காரணத்தால், அப்போது இந்தப் பிரச்சினைகளையெல்லாம் சேர்த்து ஆராயப்படும்.